**பிரிவு 1 நோக்கம்**
1 ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது பாடசாலை வழாகத்தின் பாதுகாப்பிற்கான பாடசாலை சட்டங்களின் செயற்பாடோடு இணைந்தது.
2 இது பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவுவதுடன் கற்பிப்பவர்களினதும் மற்றும் மாணவ மாணவிகளின் தவறுகளையும் ஒழுங்கு செய்கிறது.

**பிரிவு 2 வரையறை**
கூர் நகர பாடசாலையைச் சேர்ந்த மாணவ மாணவிகள் அனைவருக்கும் இவ் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் பொருந்தும்.

**பிரிவு 3 பாடசாலை ஒழுக்கம்**
1 மாணவ மாணவிகள் தம்மிடையேயும் மற்றம் தமக்கு மூத்தவர்கள் இடையேயும் மதிப்பை பேணவேண்டும்.
2 நீங்கள் ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகிகள், உறுப்பினர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும்
3 நீங்கள் பாடசாலை நேரங்களை முறையாக கடைப்பிடிக்க வேண்டும்.
4 நீங்கள் பாடசாலை நேரங்களுக்கான பொருத்தமான சீருடைகள் அணியவேண்டும். (சாதாரண வகுப்பு, விழையாட்டு, உடற்பயிற்சி, கைப்பணி, மனையியல் போன்றவற்றிற்கு)
5 பாடசாலைக்கு அபகீர்த்தியான அனைத்தையும் கைவிட வேண்டும்.

**பிரிவு 4 அறைகள், ஒழுங்கமைப்பு, கருவிகள், பாடசாலை உபகரணங்கள்.**
1 மாணவ மாணவிகள் பாடசாலைப் பொருட்கள், ஒழுங்கமைப்பு, கருவிகள், உபகரணங்கள் மீது அவதானமும் அக்கறையும் செலுத்த வேண்டும்.

**பிரிவு 5 இணையக் கட்டமைப்பு, கைத்தொலைபேசி**
1 நகரப்பாடசாலையின் இணையக்கட்டமைப்பானது மாணவர்களின் கல்வித் தேவைக்காக அமைக்கப்பட்டது. கணனியின் வன்பொருள் மற்றும் மென்பொருள் செயற்பாடுகளில் சட்டவிரோதமானவற்றை தரவிறக்கம் செய்வதும் அவைகளில் மாற்றம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. இணையச் செயற்பாடுகளில் நகரபாடசாலையானது மாணவ மாணவிகளிடம் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கிறது.
2 வகுப்பு நேரங்களில் தனிப்பட்ட தேவை கருதிய கைத்தொலைபேசி மற்றும் இலத்திரனியல் கருவிகளின் பாவனைகள் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறிப் பாவிப்பவர்களின் கருவிகளை நிறுத்துமாறு கோரவும், அல்லது பறிமுதல் செய்யவும் ஆசிரியர்களுக்கு உரிமை உண்டு. அவ்வாறே புகைப்படம், திரைப்படம் பதிவுகள் செய்யவும் அனுமதியில்லை.
3 மாணவ மாணவிகளுக்கு எதிராகவோ, ஆசிரியர்கள் மற்றும் நகரபாடசாலைப் பணியாளர்களுக்கு எதிராகவோ, பாடசாலை அதிபருக்கு எதிராகவோ தனிப்பட்ட முறையிலாக
இணையத்தளத்தையோ, செய்தி ஊடகங்களையோ (சமூக வலைய தளங்கள்) துஷ்பிரயோகம் செய்பவர்கள் மீது மேற்குறிப்பிட்டவகையில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தண்டனைக் குரிய குற்றச்சாட்டாக பொலிஸ் நிலையத்தில் வழக்கு தாக்கல்செய்யப்படும்.

**பிரிவு 6 போதைப் பொருட்கள்**
போதைவஸ்து, உட்கொள்ளுதலும் வைத்திருப்பதும் புகைத்தலும் (இலத்திரன் சிகரெட் உட்பட) பாடசாலை வழாகத்திலும் மற்றும் பாடசாலை நிகழ்வுகளிலும் தடைசெய்யப்பட்டுள்து.

**பிரிவு 7 ஆயுதங்களும் அது சம்பந்தப்பட்டவையும்**
1 சகலவகை ஆயுதங்களும், அதுபோன்றவைகளும், வேறும் ஆபத்தான பொருட்களும் ( கதிர் புள்ளி போன்றவைகளும்) பாடசாலை வழாகத்திலும் மற்றும் பாடசாலை நிகழ்வுகளிலும் தடைசெய்யப்பட்டுள்து.
2 பாடசாலை அதிபருக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பாடசாலைக்கு இடைஞ்சல் என்று அறியப்படும் பொருட்கள் கருவிகளை தடை செய்யும் உரிமை உண்டு.
3 மேற்குறிப்பிட்ட பொருட்களை பறிமுதல் செய்யும் உரிமை ஆசிரியர்களுக்கும் உண்டு. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் அதன் தரத்திற்கேற்ப பரிசோதனைக்காக குற்றத்தடுப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்படலாம் அல்லது மாணவர்களின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படலாம்.

**பிரிவு 8 நகரபாடசாலை ஊடான சீர்திருத்தத் தண்டனை.**
1 தவறுசெய்யும் மாணவர்களின் தவறுகளின் தரத்திற்கேற்ப அவர்களுக்கு வீட்டில் அல்லது பாடசாலையில் மேலதிக பணிகள் மூலமோ அல்லது வகுப்புத்தடை மூலமோ தண்டிக்கப் படலாம். வகுப்புத்தடை என்பது அவரது கல்வியை வேறு வகுப்பிற்கு அல்லது வேறு பாடசாலைக்கு மாற்றுதல் ஆகும்.
2 பாடசாலையின் சீர்திருத்தத் தண்டனையும், மேலதிக பணிகளும் கண்காணிப்பிற்கு உட்பட்டவை. முடிந்தவரை மாணவர்கள் இந்தச் சீர்திருத்தத் தண்டனைக்கு ஒத்துழைக்க வேண்டும்.
3 அதிகூடிய தண்டனை பத்து அரை நாட்கள் வரை இருக்கும். இதனை விடுமுறைநாட்களிலும் ஏற்றுக் கடைப்பிடிக்கலாம்.

**பிரிவு 9 பாடசாலைத்தடை**
இப் பாடசாலைத்தடையானது கன்ரோன் கல்லூரிச் சட்டம் (பிரிவு.55) க்கு அமைந்ததாக இருக்கும்.

**பிரிவு 10 உள்ளடக்க உறுதிப்படுத்துதலும்,சட்டரீதியான விசாரணையும்**
1 எந்தத்தடைப் பிரிவிற்கெதிராக தவறு இழைக்கப்பட்டதென்பது தெளிவுபடுத்தப்படும். சம்பந்தப்பட்ட மாணவ மாணவிகளும் விசாரிக்கப்படுவர்.
2 மேலதிக பணி அல்லது வகுப்புத்தடை போன்ற தண்டனையானது இரண்டு அரை நாட்களுக்கு மேலாக இருந்தால் பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்கு ஆசிரியர் அல்லது அதிபர் மூலமாக அறிவிக்கப்படும். அவச-ியம் ஏற்படின் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்படும்.

**பிரிவு 11 அதிகாரங்கள்**
1 சீர்திருத்தத் தண்டனையானது வகுப்பாசிரியர் அல்லது கல்லூரி அதிபர் அல்லது கல்லூரி நிர்வாகம் ஊடாக நடைபெறும்.
2 ஆசிரியாரானவர் வாய்மொழிமூலமோ, எழுத்துமூலமோ தண்டனை அறிவித்தலை வழங்கலாம். மேலதிக பணி அல்லது வகுப்புத்தடை என்பதனை அதே பாடசாலையில் என்றால் இரண்டு அரை நாட்களுக்கு வழங்கலாம்.
3 பாடசாலை அதிபருக்கு இதே தண்டனையை அதே பாடசாலையில் பத்து அரை நாட்களுக்கு வழங்க உரிமை உண்டு
4 பாடசாலைத்தடை தண்டனையை வழங்கும் உரிமை பாசாலைச்சட்டம் பிரிவு 9 இன் கீழ் பாடசாலை நிர்-வாகத்திற்கு உண்டு.

**பிரிவு 12 தண்டனை நீடிப்பு**
1 தண்டனையை நீடிப்பதாயின் பாடசாலை அதிபர் பத்து நாட்களுக்குள் முடிவெடுக்கலாம்.
2 பாடசாலை நிர்வாகம் இதனை கல்வித்திணைக்களத்தினிடம் ஒப்படைப்பதாயின் அதனையும் பத்து நாட்களுக்குள் முடிவெடுக்கலாம்.
3 கல்வித்திணைக்களத்தினிடம் ஒப்படைப்பதானது கன்ரோன்கல்லூரிச் சட்டத்தின் பிரகாரம் அமையும்.

**பிரிவு 13 முடிவு**
அவ் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் 01 ஆவணி 2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும். 19 தை 2007 முதல் இதுவரை இருந்த ஒழுங்குகளுக்கு பதிலாக இது அமையும்.

இது கூர் நகர பாடசாலை நிர்வாகம் 24 ஆவணி 2015 இல் நிறைவேற்றிய முடிவு.
19 தை 2007 முதல் இதுவரை இருந்த ஒழுங்குகளுக்கு பதிலாக இது 01 ஆவணி 2015 முதல் நடைமுறைப் படுத்தப்படும்.